<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 355/2023 |
| Prosecution: | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | கோவிந்த்(காவல் உதவி ஆணையர்) |
| **Father/Husband' Name** | ~ | தாமோதரன் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 11.02.2026.**</u>

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் தற்போது ஆவடி காவல் ஆணையரகத்தில் மத்திய குற்றப்பிரிவில் காவல் உதவி ஆணையராக பணியாற்றி வருகின்றேன். இதற்கு முன்பு பல்லாவரம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 13.04.2022 அன்று இரவு 11 மணி அளவில் நிலைய அலுவலில் இருந்தபோது புகார்தாரர் பத்மாவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.284/2022 சட்டப்பிரிவு 392 இ.த.ச.வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார்தாரரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவத்தை கண்ணுற்ற

சாட்சியான ஜெயசந்திரன் மற்றும் சம்பவத்தை கேள்விபட்ட சாட்சியான ரவிசந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்பு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் முனுசாமி மற்றும் அரிகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை வேளச்சேரி காவல் நிலைய குற்ற எண் 322/2022, 337/2022 ஆகிய வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு எதிரிகள் ஹக்கீம், ஜான் பாஷா, சந்தோஷ்குமார், விஜயகுமார் ஆகியோர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி எதிரிகளில் 4வது எதிரியான விஜயகுமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 4 சவரன் தங்க செயினை ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான இளவரசு மற்றும் ஜோதிராமன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி 4 எதிரிகளும் வேளச்சேரி காவல் நிலைய குற்ற எண்ணில் 02.07.2022 முதல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

3. அதன் பின்னிட்டு மேற்படி எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி 4 எதிரிகளையும் புழல் மத்திய சிறையில் வைத்து சம்பிரதாய கைது செய்து 18.07.2022 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜர் படுத்ததப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேற்படி 4வது எதிரி விஜயகுமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான " பொன் செயின்களை மாற்று நகைகளாக மாற்றி எனது வீட்டில் வைத்துள்ளதை எடுத்து ஆஜர் செய்கிறேன்" **அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் தங்க செயினை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். **படிவம் 95 அ.சா. ஆ. 8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில்

புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 392 உ/இ 34 இ.த.ச.வின் கீழ் 01.08.2022 ஆம் தேதி கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

வழக்கில் புகார் மனு என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையும் புகார் கொடுத்த தினமன்று பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டு நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பி வைத்தீர்கள் என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை ஆனால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மறு தினமே அனுப்பிவிட்டேன். வழக்கில் முதல் தகவல் அறிக்கை 27.04.2022 அன்று நீதிமன்றத்திற்கு பெறப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.மேற்படி முதல் தகவல் அறிக்கை கால தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது தொடர்பாக காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் எப்போது சம்பிரதாய கைது செய்தேன் என்றால் 12.07.2022 . வேளச்சேரி காவல் நிலையத்தில் எதிரிகள் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் எதிரிகளை கைது செய்தேன் என்றால் சரிதான். வேளச்சேரி காவல் நிலைய குற்றவழக்கில் எதிரிகள் எப்போது கைது செய்யப்பட்டார்கள் என்றால் 02.07.2022. ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக குறிப்பிட்டுள்ள இளவரசு என்பவரிடம் 14.04.2022அன்று நான் வாக்குமூலம் பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த தேதி தவறாக குறிப்பிடப்பட்டு விட்டது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூல சாட்சி இளவரசு என்பவரின் விசாரணை செய்து பதிவு செய்த வாக்கு மூலத்தில் கீழே புலன் விசாரணை அதிகாரி என குறிப்பிட்டுள்ள இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். இவ் வழக்கில் எதிரிகளுக்கு அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டதா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும்

கிடையாது என்றாலும் எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif-cum Judicial Magistrate,

Pallavaram